**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,இலுப்பூர்**

**முன்னிலை : திருமதி. M. சாதத்துணிஷா, பி.ஏ.பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 29ம் நாள் வியாழக் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 269/2025

**(CNR.NO.TNPD12-001633-2025)**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Illuppur |
| 2. | Name of the Judge | Tmt.M.Sathathunisha, BA.BL., |
| 3 | Date of Judgment | 29.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | **CC 269/2025,TNPD12-001633-2025)** |
| 5. | Name of the Parties of the case | The Inspector of Police, Annavasal- **Complainant** |
| | | **Vignesh**<br>**Accused** |
| 6. | Date of Occurence | 04.10.2025 |
| 7. | Date of Complaint | 13.10.2025 |
| 8. | Date of Arrest if any and remand | 13.10.2025 |
| 9. | Period of Remand of the Accused | - |
| 10. | Date if release on bail | 27.10.2025 |
| 11. | Date of Final Report | 21.11.2025 |
| 12. | Date of Committal of the case | - |

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:38:28 +0530

<table>
<tr><td></td><td>to the Court of Sessions</td><td></td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 251 of Code of Criminal Procedure</td><td>04.06.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the witnesses</td><td><table>
<tr><th>Witnesses</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW 1</td><td>22.06.2026</td><td>-</td></tr>
<tr><td>PW 2</td><td>22.06.2026</td><td>-</td></tr>
<tr><td>PW 3</td><td>22.06.2026</td><td>-</td></tr>
<tr><td>PW 4</td><td>25.06.2026</td><td>25.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code</td><td>--</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s. 313 of the Code</td><td>29.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior courts and the results there of</td><td>--</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>22.06.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>25.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>29.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>---</td></tr>
</table>

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:38:35 +0530

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

அன்னவாசல் காவல் நிலையம்,

காவல் நிலைய குற்ற எண்.255/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்

விக்னேஷ்,

த/பெ.ரெங்கசாமி,

கோவில்பட்டி,

திருக்கோகர்ணம்,

புதுக்கோட்டை Dt. .... குற்றம் சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது என் முன்பாக இறுதியாக கடந்த 25.06.2026 அன்று விசாரணைக்கு வந்த பொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சிவன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்–**

இவ்வழக்கில் கடந்த 04.10.2025ம் தேதி 13.45 மணிக்கு அ.சா 1 அன்னவாசல் கூட்டுறவு வங்கியில் அ.சா.1ன் நகைகளை அடமானம் வைத்த நகைகளை திருப்புவதற்காக அ.சா.1 அவரது மகள் மற்றும் தங்கை மகன் ஆகியோருடன் அ.சா 1க்கு சொந்தமான TVS XL இருச்சக்கர வாகத்தில் அன்னவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சென்று நகைகளை திருப்பிக்கொண்டு மீண்டும், அ.சா 1ன் வீட்டிற்கு செல்ல வயலோகம் ரோட்டில் மாரிமுத்து என்பவரது RS பதி காட்ன் அருகே இருசக்கர வாகன்ததில் சென்றுக்கொண்டிருந்துள்ளார் என்றும், அப்போது அ.சா 1க்கு பின்னால் வந்த எதிரி ஊதா கலர் பல்சர் வண்டியில் அ.சா 1ன் வண்டி அருகில் ஏதோ கேட்பதோபல் வந்து அ.சா 1ன் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 3 பவுன் தங்கசெயினை

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.06.29 16:38:41 +0530

தலையோடு கழட்டி பறித்துக் கொண்டு அங்கிருந்து சென்று குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரி மீது BNS பிரிவு 304 (2)ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2. இந்த வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலையானவுடன் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிரிவு 230 BNSS –ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போத, இவ்வழக்கில் எதிரி மீது BNS பிரிவு 304(2)ன் படி குற்றச்சாட்டுகள் வனைய போதிய முகாந்திரம் இருந்ததினால் 263 (2) BNSS –ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினர். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்–</u>

i) அ.சா.1 சசிகலா தனது சாட்சியத்தில், எதிரியை தெரியாது என்றும், கடந்த 04.10.2025 ஆம் தேதி மதியம் சுமார் 1.45 மணியளவில் தான் தனது மகளுடன் தனது இருசக்கர வாகனமான TVS XL ல் அன்னவாசல் வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சென்று தனது நகைகளை திருப்பி கொண்டு தனது வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தபோது வயலோகம் ரோட்டில் உள்ள மாரிமுத்து என்பவரது காட்டிற்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது தனக்கு

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:38:48 +0530

பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த 25 வயது மதிக்கதக்க ஒரு நபர் தனது கழுத்தில் இருந்த 3 பவுன் தங்க சங்கிலியை பறித்து சென்றார் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டேன் என்றும், பின்னர் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், பின்னர் சிறிது நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் இருந்து தனக்கு போன் செய்து தனது நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், தான் சென்று அடையாளம் காட்டி, அந்த நகையை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டேன் என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 பழனி தனது சாட்சியத்தில், எதிரியை தனக்கு தெரியாது என்றும், கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டு கொடுத்தேன் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா 3 சிங்காரம் தனது சாட்சியத்தில், எதிரியை தனக்கு தெரியாது என்றும், கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டு கொடுத்தேன் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.4 சரவணன் (காவல் உதவி ஆய்வாளர்) தனது கூடுதல் சாட்சியத்தில், கடந்த 13.10.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு அன்னவாசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சகிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலையக் குற்ற எண்.255/2025 U/s.304(2)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்னேஷ் மற்றும் தனவேல்

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.06.29 16:39:29 +0530

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரையானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், கடந்த 13.10.2025ம் தேதி 16.00 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து அன்னவாசல் செல்லும் ரோட்டில் எதிரியை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்து, கைது செய்து, அவர் தாமாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பழனி, சிங்காரம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, அதன் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், பின்னர் எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், வழக்குச் சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான பழனி மற்றும் சிங்காரம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக பிரிவு 304 (2)BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், இவ்வழக்கின் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமான சங்கதிகளை குறித்து BNSS 351 (1) (b)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து எடுத்துக் கூறி விளக்கி வினவிய போது, அரசு தரப்பு சாட்சியம் பொய் என்று கூறியுள்ளனர். மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினர்.

6. குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்டவர் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.06.29 16:39:37 +0530

அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**8) தீர்வு–**

(1) இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து அரசு தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்த பார்த்தபொழுது, புகாதாரரான அ.சா 1 தனது சாட்சியத்தில், கடந்த 04.10.2025 ஆம் தேதி மதியம் சுமார் 1.45 மணியளவில் தான் தனது மகளுடன் தனது இருசக்கர வாகனமான TVS XL ல் அன்னவாசல் வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சென்று தனது நகைகளை திருப்பி கொண்டு தனது வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தபோது வயலோகம் ரோட்டில் உள்ள மாரிமுத்து என்பவரது காட்டிற்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது தனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த 25 வயது மதிக்கதக்க ஒரு நபர் தனது கழுத்தில் இருந்த 3 பவுன் தங்க சங்கிலியை பறித்து சென்றார் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், பின்னர் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், பின்னர் சிறிது நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் இருந்து தனக்கு போன் செய்து தனது நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், தான் சென்று அடையாளம் காட்டி, அந்த நகையை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

(2) மேற்கண்டவாறு, அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளபோதிலும், அரசு தரப்பில் கடந்த 13.10.2025ம் தேதி காலை 16.00 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து அன்னவாசல் செல்லும் ரோட்டில் எதிரியை கைது செய்து, அ.சா 2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதன் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளதைப் பார்க்கும் பொழுது, எதிரி மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி குற்றம்சாட்டப்பட்டவராக சேர்க்கப்படுள்ளார் என்பது தெரியவருகிறது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:39:44 +0530

மேலும், இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. எனவே மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றுறம் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ன் சாட்சியங்களின் மூலம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக கூறப்படும் சங்கதி குறித்தும், வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சங்கிதி குறித்தும், நிரூபணம் செய்யப்பட்டடுள்ளதா என்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

3) அந்த வகையில், அ.சா 2, அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில், அ.சா 2, அ.சா.3 தங்களது சாட்சியத்தில், , எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் தங்களுடையது தான் என்றும், அந்த கையொப்பங்களை போலீசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டு கொடுத்தோம் என்றும், வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

எனவே அரசு தரப்பில் கூறியுள்ளது போல், அ.சா.2, அ.சா.3 சாட்சிகளின் முன்னிலையில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது குறித்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 ஆன நகை கைப்பற்றப்பட்டது குறித்தும் எவ்வித நிரூபணமும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும், இவ்வழக்கின் அ.சா.4 காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், எதிரியை குற்றத்தோடு தொடர்புபடுத்தும் வகையிலும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்திருந்தாலும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.3ன் சாட்சியங்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளதாலும், மேற்சொன்ன

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:39:52 +0530

அ.சா.4ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு வழு சேர்க்கும் விதத்தில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில், எதிரி தான் அ.சா.1ன் நகையை திருடிச் சென்று விட்டார் என்ற குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள BNS பிரிவு 304(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் முழுவதுமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி BNSS பிரிவு 271(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட RP.No.196/2025 ல் உள்ள வழக்கு சொத்தான தங்க செயின் ஒன்றை(சுமார் 3 பவுன்) CRMP.No 486/2025 என்ற எண்ணிலும், மேலும் பதிவு எண் இல்லாத ஊதா கலர் பல்சர் வண்டியினை CRMP.No509/2025 என்ற எண்ணிலும் இடைக்காலமாக பெற்றுக்கொண்ட மனுதாரர்களே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 29ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:40:01 +0530

ஒம்/–எம்.சாதத்துன்னிசா

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>**

அ.சா.1.சசிகலா

அ.சா.2.பழனி

அ.சா.3.சிங்காரம்

அ.சா.4.சரவணன் (காவல் உதவி ஆய்வாளர்)

**<u>Judicial Form No:68</u>**

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் | 22.06.2026 | அ.சா.ஆ1 | அ.சா.1 | அசல் |
| 2. | புகைப்படம் | 22.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.1 | அசல் |
| 3. | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் | 22.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.2 | அசல் |
| 4. | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் | 22.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.2 | அசல் |
| 5. | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் | 22.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |
| 6. | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் | 22.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| 7. | முதல் தகவல் அறிக்கை | 25.06.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |
| 8. | மாதிரி வரைபடம் | 25.06.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.4 | அசல் |
| 9. | பார்வை மகஜர் | 25.06.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.4 | அசல் |
| 10. | கைப்பற்றுதல் மகஜர் | 25.06.2026 | அ.சா.ஆ.10 | அ.சா.4 | அசல் |
| 11. | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | 25.06.2026 | அ.சா.ஆ.11 | அ.சா.4 | அசல் |

M
SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:40:13 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | படிவம்–91 | 25.06.2026 | அ.சா.ஆ.12 | அ.சா.4 | அசல் |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** ... இல்லை

**<u>சான்றுபொருள் : புகைப்படத்தில் உள்ள நகை.</u>**

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.06.29 16:40:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

<u>குறிப்பு–</u>

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்குமேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.